# எழும்பூர் தொகுதி திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!



சென்னை,செப்.13-

எழும்பூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5-க்குட்பட்ட வார்டு எண்.58 மற்றும் 61-இல் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

எழும்பூர் தொகுதி, சென்னை மாநகராட்சி, மண்டலம் 5-க்குட்பட்ட வார்டு எண். 58 மற்றும் 61-இல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நடைபெற்று வரும் திட்டப் பணிகளான, நேவல் ஹாஸ்பிடல் 2-வது தெருவில் ரூ.36.40 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குக் கூடம் கட்டும் பணி; சைடன்ஹாம்ஸ் சாலையில், புண்ணாத்தம்மன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் ரூ.11.99 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணி; டிரைவர் தெருவிலுள்ள சாலையோரப் பூங்காவில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் உட்புற மற்றும் வெளிப்புற நடைபாதை அமைக்கும் பணிகள்; டிரைவர் தெருவிலுள்ள மாநகராட்சி காப்பகத்தில் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டாம் தளம் அமைக்கும் பணி; பாந்தியன் சாலை, எழும்பூர் அரசு மகளிர் மருத்துவமனை அருகிலும், அதன் எதிரிலும் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு பயணியர் நிழற்குடைகள் அமைக்கும் பணி; ரங்காச்சாரி தெருவிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் பணி; வெங்கு தெருவில் ரூ.49.90 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குக் கூடம் கட்டும் பணி; வெங்கு தெருவிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் ரூ.23.40 இலட்சம் மதிப்பீட்டில் பார்வையாளர் மாடம் அமைக்கும் பணி; டாக்டர் சந்தோஷ் நகரில் ரூ.45.50 இலட்சம் மதிப்பீட்டில் அங்கான்வாடி மையமும் உடற்பயிற்சிக்கூடமும் அமைக்கும் பணி மற்றும் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் பணி ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்தும்;

இவ்விரு வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியின் சார்பில் நடைபெற்றும் வரும் பணிகளான, ரித்தர்டன் சாலையில் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் கிழக்குப் புறம் 830 மீட்டர் நீளமுள்ள நடைபாதையும், அதன் மேற்குப் புறம் 830 மீட்டர் நீளமுள்ள நடைபாதையும் அமைக்கும் பணிகள்; கண்ணப்பர் திடலில் 1.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விலங்குகள் இனப் பெருக்கக் கட்டுப்பாடு மையம் அமைக்கும் பணி; கெங்கு ரெட்டி சுரங்கப் பாதையை 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; எழும்பூர் அரசு மகளிர் மருத்துவமனையில் 5.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாய்மார்கள் ஒய்வறை மற்றும் உணவகம் அமைக்கும் பணி உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும்;

மற்றும் இவ்விரு வார்டுகளிலும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகள்; சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிய சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்; சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நடைபெற்று வரும் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிகள்; பருவமழையை எதிர்கொள்ளுவதற்கு ஏற்ப இவ்விரு வார்டுகளிலும் முன்னேற்பட்டாகச் செய்ய வேண்டிய பணிகள்; இவ்விரு வார்டுகளிலும் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்; இவ்விரு வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில், சென்னை மாநகராட்சியின் வடக்கு மண்டலத் துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையில் மூலக்கொத்தளத்திலுள்ள வடக்கு மண்டலத் துணை ஆணையர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.


இவ்வாய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகராட்சியின் 5-ஆவது மண்டல அலுவலர் மற்றும் 58, 61 வார்டுகளைச் சேர்ந்த மாநகராட்சி மற்றும் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

பேரறிஞர் அண்ணா 117வது பிறந்த நாள்! சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கின்றார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 117வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2025 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நே.சிற்றரசு,
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நாள் : 12.09.2025.

---

நே.சிற்றரசு தலைமை! வினோத் வேலாயுதம், மா.பா. அன்புதுரை முன்னிலை! பகுதி அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# துணை அமைப்பாளர் எஸ்.பரசுராமன் இல்லத்திருமண வரவேற்பு!

## தயாநிதி மாறன் எம்.பி. - அன்பகம் கலை - நா.எழிலன் எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

சென்னை, செப். 13-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ். பரசுராமன்-பி.ஜீவா ஆகியோரின் புதல்வர் ஜெ.பி.ஜானகிராமன் (எ) ஜானுக்கும், கொரட்டூர் ஜெ. லட்சுமிபதி - எல். மஞ்சுளா ஆகியோரின் புதல்வி எல். சைந்தவி (எ) ஹரிணிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (13.09.2025-சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் எண். 10/4 ஆற்காடு சாலை போரூர் ராஜலட்சுமி மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமண வரவேற்பிற்கு சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

வினோத் வேலாயுதம், நுங்கை வி.எஸ்.ராஜ், மா. பா.அன்புதுரை எம்.டி.ஆர். நாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த. குணசேகர், பா.கமலக்கண்ணன், மு.சீனிவாசன், திருமலை பொன்னுரங்கம் கே.எஸ். தினேஷ்பிரபு, எம்.டி.ஆர்.புகழ், வி.என். பாபு, எஸ்.அண்ணாதுரை, பொ.குப்புசாமி, பழக்கடை ஆறுமுகம் - வரவேற்கின்றனர்.

இதில் தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை,மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ.,இ சைதை சாதிக், சி. கே.ரங்கராஜன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் பகுதி செயலாளர்கள் இராமலிங்கம், ஏ.ஆர். பி.எம்.. காமராஜ், எஸ்.மதன் மோகன், ச.பரமசிவம்,

து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, டி.ஜோஸ்டேனியல், சி. சியாமளா, எம்.வெற்றிச்செல்வி, ப.ராபர்ட்

புவி பாலாஜி, என்.பி.இதயத்பாஷா, ஸ்டெர்லிங் மோகன், பி.பொன்னம்மாள் எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மு.வெங்கடேசன், டி.வைலட் மேரி, ம.ஜெயகுமார் எலிசபெத் அகஸ்டின்பாபு , நந்தினி, பிரேமா சுரேஷ், மல்லிகா யுவராஜ், செல்வா

க.சிட்டிபாபு, வரதை த.பரி, ச.டேவி(இன்பராஜ், மு.மோகன், கோ.யுவராஜ் ஆர். பாபு, பீட்டர்ஜான், நுங்கை பா.மகேஷ், த.தேவராஜ், எல்.தவமணி எஸ்.சத்ய பெருமாள், எம்.என்.விஷ்ணு, எஸ்.என்.கே.ராமன்

ப.பிரகாஷ், எஸ்.எம். கே.அண்ணாதுரை, துபாய் வி.ஆர்.விஜய், டி.எஸ். ராஜா, எம்.டி.ஆர்.சாரதிமணிமாறன், ச.அசோக்குமார், டி.கே.லதா பிளாரன்ஸ், இளம்பாரதி, என்.மோகனவேல், செ.ந.எல்லப்பன், டி.ஜி.சுரேந்திரன்,கே. எல்.எம்.மணி, ஜெ.இருதயநாதன், அமரேசன், டி.செல்வி, வினோத் வையாபுரி, எஸ். கிஷோர், பிரசன்னா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

புஷ்பாநகர் என். பழனி, ஆர். கதிரவன், மு.சா. பாரத்குமார், பிரஸ் மணி, என். இராதாகிருஷ்ணன், ஜி. மார்ட்டின் ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்

---

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, செப்.13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி சார்பில் வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் இன்று (13.9.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் மாநில வர்த்தகர் அணி துணை தலைவர் தி.நகர் எஸ்.மோகன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், துணை பாகமுகவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் முப்பெரும் விழா.

ஓரணியில் தமிழ்நாடு வாக்குச்சாவடி அளவிலான உறுதி மொழி கூட்டங்கள் குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.


இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## லேனா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!



திருவள்ளூர் செப் 13;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, தமிழ் நாடு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஆலோசனைப்படி

13092025 இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

அதுசமய இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி..ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி. சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ், கவி. கணேசன், , மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், , மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே. சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே. ஆனந்தகுமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், ஏ.ஆர். டி.உதயசூரியன், இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு. தமிழ உதயன் உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் பொருள் மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் தலைமையிலான மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள் குறித்து, செப்டம்பர் 17 கரூர் முப்பெரும் விழா குறித்து என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

---

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## பகுதிக் கழக செயலாளர் பம்மல் வே. கருணாநிதி அறிக்கை!

சென்னை செப்:13

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பம்மல் தெற்கு பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில்,6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,பா. கவிதா, துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன்,என்.கே.ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு,ரா. கோகுல்,

சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பம்மல் எல்.சி. மஹால் திருமண மண்டபத்தில் ( இன்று 13092025) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி,தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர்தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் திருமதி.க.வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ்,பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது ,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர்

அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் L.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் P.K.A. சத்தியபிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் P.S. ரவி EX MC, வட்டக் கழக செயலாளர்கள் A.அனிஸ்டன், மு.இன்பசேகர் MC, N. காந்தி, H. முகமது அப்பாஸ், M. சுகுமாரன், P. ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் A. மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட,மாநகர,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA2),BDA, BLC, கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்:

1. செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் முப்பெரும் விழா குறித்து.

2. பூத் வாரியாக பூத் கமிட்டி கூட்டம் நடத்துவது

3. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவம் சமர்ப்பித்தல்

4.கழக ஆக்கப் பணிகள்.

---

நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# மிசா காந்தல் இராசு துணைவியார் தவமணி அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 13-

நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் - மறைந்த மிசா. காந்தல் இராசு அவர்களின் துணைவியார் தவமணி அம்மாள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த மிசா.காந்தல் இராசு அவர்களின் துணைவியாரும், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.இளங்கோவன் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆர்.வெங்கடேஷ் ஆகியோரது தாயாருமான திருமதி. தவமணி அம்மாள் (வயது 87) அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அன்னாரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தாருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் உறுதிமொழி ஏற்க

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள்

மாதவரம்,செப்.13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனைக் கூட்டம் இன்று 13.9.2025 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மாத்தூர் 19 வது வட்டம் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி அவைத்தலைவர் வி. திராவிட வீரன் தலைமை தாங்குகிறார். 19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்க, பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர். முரளி, க.காசிநாதன், பி. தரணி, பி. நிர்மல் குமார்,கே. செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி. கார்த்திகேயன், பா. சந்திரன், கே.ராஜா, வட்ட செயலாளர்கள் கே. அங்குசாமி, இ.கண்ணப்பன், கே. கருணாகரன், பி.எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், கவுன்சிலர் நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட வட்டங்களில் ஒவ்வொரு பாகம் வாரியாக ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன் உறுதிமொழி ஏற்பு, கழக முப்பெரும் விழா, மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

எனவே மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது உறுப்பினர்கள், பாகமுகவர்கள், பாக உறுப்பினர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டும். இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

# திருவொற்றியூர் மத்திய பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் அறிக்கை!

சென்னை, செப்.13-

திருவொற்றியூர் மத்தியப் பகுதியின் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் பகுதி அவைத்தலைவர் வா.முத்துசாமி தலைமையில் இன்று (13.09.2025) மாலை 5.00 மணியளவில் பகுதிக் கழக அலுவலகம் (காமராஜர் சாலை ராம் ராஜ் காட்டன் அருகில்) நடைபெறுகிறது.

இதில் வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மத்தியப் பகுதி செயலாளர், 2வது, மண்டலக்குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் கேட்டுக் கொள்கிறார்.